# 2.1 மூதுரை

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைச் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
என்றெண்ணி என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ……………………
அ) என் + றெண்ணி
ஆ) என்று + எண்ணி
இ) என்றெ + எண்ணி
ஈ) என்று + றெண்ணி
Answer:
ஆ) என்று + எண்ணி

Question 2.
மடை + தலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………
அ) மடைதலை
ஆ) மடைத்தலை
இ) மடத்தலை
ஈ) மடதலை
Answer:
ஆ) மடைத்தலை

Question 3.
வரும் + அளவும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………………
அ) வருமளவும்
ஆ) வருஅளவும்
இ) வரும்மளவும்
ஈ) வரும் அளவும்
Answer:
அ) வருமளவும்

Question 4.
அறிவிலர் என்பதன் எதிர்ச்சொல் ......................
அ) அறிவில்லாதவர்
ஆ) அறிவுடையார்
இ) அறியாதார்
ஈ) படிக்காதவர்
Answer:
ஆ) அறிவுடையார்

Question 5.
எண்ணுதல் – இச்சொல்லுக்குரிய பொருள் ...........
அ) வாடுதல்
ஆ) வருந்துதல்
இ) நனைத்தல்
ஈ) நினைத்தல்
Answer:
ஈ) நினைத்தல்

**ஆ. இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

...................... , ..........................
...................... , ..........................
...................... , ..........................
Answer:
அடக்கம்
உடையார்
வருமளவும்
கடக்கக்
மடைத்தலையில்
இருக்குமாம்
Answer:
அடக்கம்
உடையார்
வருமளவும்

கடக்கக்
மடைத்தலையில்
இருக்குமாம்

**இ. மடைத்தலை' இச்சொல்லில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

…………, ……………, ………………. , ………………….

Answer:

மடை, தலை, மலை, தடை, மதலை.

**ஈ. பொருத்துக.**

1. உறுமீன் – நீர் பாயும் வழி
2. கருதவும் – பணிவு
3. அறிவிலர் – நினைக்கவும்
4. மடைத்தலை – பெரிய மீன்
5. அடக்கம் – அறிவு இல்லாதவர்

Answer:

1. உறுமீன் – பெரிய மீன்
2. கருதவும் – நினைக்கவும்
3. அறிவிலர் – அறிவு இல்லாதவர்
4. மடைத்தலை – நீர் பாயும் வழி
5. அடக்கம் – பணிவு

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

Question 1.

கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?

Answer:

கொக்கு தனக்கு இரையாகக் கூடிய பெரிய மீன்கள் வரும் வரை அசைவின்றிக் காத்திருக்கின்றது.

Question 2.
யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?

Answer:
தமக்குரிய காலம் வரும் வரை சிலர் அடங்கி இருப்பர். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணிவிடக்கூடாது.

ஊ. சிந்தனை வினா.

அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக்கூடாது. ஏன்? கலந்துரையாடுக.

மாணவன் 1 : வணக்கம்! அடக்கம் இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது.
மாணவன் 2 : ஆம். சரியாக கூறினாய். அடக்கமாக இருப்பவர்கள் தனக்கு தகுந்த நேரம் வரும் வரை பொறுமையாக இருப்பர்.
மாணவன் 3 : தனக்கு ஏற்ற நேரம் வந்தவுடன் விரைவாகச் செயலை முடித்து வெற்றி பெற்று விடுவார்கள். ஆதலால் அடக்கமானவரை அறிவில்லாதவராக எண்ணுதல் கூடாது.